தமிழ் நாடு சட்ட மன்றம்

செவ்வாய்க்கிழமை, 1973 பிப்ரவரி 6.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் [திரு. ம. பொ. சிவஞானம்] அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

1. வினக்கள்–விடைகள்.

Unemployed Craftsmen

* 31. Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether the unemployed craftsmen passed out from the Industrial Training Institutes were directed to contact the Assistant Directors of Industries and Commerce in organising Industrial Co-operative Societies and Enterprises; and

(*b*) if so, the details thereof?

வேலையற்றிருக்கும் கைவினைஞர்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தொழில் பயிற்சிப் பள்ளிகளிலிருந்து தேர்வு பெற்று வேலையற்றிருக்கும் கைவினைஞர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்—நிறுவனங்கள் ஆகியவற்றை அமைக்க தொழில்-வணிகத் துறையின் உதவி இயக்குநரோடு தொடர்பு கொள்ளுமாறு கூறப்பட்டனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) 10 பயிற்சியாளர்கள் ஒன்றுகச் சேர்ந்து ஆளுக்கு ரூ. 10 முதல் ரூ. 1,000 வரை பணமாக முதலீடு செய்யவேண்டும். பிறகு அவர்கட்கு தொழில் கூட்டுறவு வங்கி, முதலீட்டுப் பணத்தைப்போல் பத்துப் பங்கு பணம் கடனுக உதவி, தொழிற் கூட்டுறவு அமைப்பு ஏற்பட உதவி செய்யும்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, ஆண்டு ஒன்றுக்கு இந்தப் பள்ளியிலிருந்து பயிற்சி பெற்று வெளியே செல்லக்கூடியவர் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களில் எவ்வளவு பேர் இந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துப் பணி புரிகிறுர்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர்வர்களே, படித்து வெளியேறியவர் பற்றிய கணக்கு என்னிடமில்லை. ஆனால் இந்தத் திட்டத்தை யாரும் இதுவரை பயன்படுத்தி வந்ததாகத் தெரியவில்லை. பின்னாலே இதுபற்றி மறுபடியும் பரிசிலனை செய்யப்பட்டதில், இந்த ஆயிரம் ரூபாய் ஒரு தனி நபருக்கு, ஐ.டி.ஐ. படித்த மாணவருக்குக் கொடுக்கலாம் என்ற திட்டம் போதவில்லை யென்ற முடிவுக்கு வந்து, இப்போது 5,000 ரூபாய் வரை அந்தக் கடனைத் தரலாம் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, எத்தனை ஆண்டுகள் இந்தப் பரிசோதனை நடந்து இந்தத் திட்டம் செயல்படவில்லையென்ற உண்மையைக் கண்டுபிடிக்க முடிந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே இதை முடிவு செய்தோம். அதற்குப் பின்னாலே 1972-வது வருடம் 7-வது மாதத்திலே இந்த மாதிரி ஒரு திட்டத்திற்கு யார் வேண்டு மானாலும் மனுச் செய்யலாமென்று அறிவித்திருந்தது. அதற்குப் பின்னாலே இதுபற்றிய முடிவை மாற்றிக்கொண்டிருக்கிறோம்.

Recruitment of apprentices through the Employment Exchanges

* 32. *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government of India have informed the Director of Employment and Training not to compel the recruitment of apprentices through the Employment Exchanges; and

(*b*) if so, the details thereof?

வேலை வாய்ப்பு நிலையங்கள் மூலம் தொழில் பழகுவோரைச் சேர்த்துக்கொள்ளுதல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழில் பழகுவோர் வேலை வாய்ப்பு நிலையங்கள் மூலம் தான் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்த வேண்டாம் என வேலை வாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநருக்கு இந்திய அரசு தெரிவித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?